க.பொ.த. உயர்தரத்திற்கான

வாரப்பாடசாலை செயற்பாட்டுப்பத்திரம்

தரம் - 13 பாடம்:- தமிழ்

01. மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

கன்றுதன் பயமுலை மாந்த முன்றிற்
றினைபிடி யுண்ணும் பெருங்கன் னாட
கெட்டிடத் துவந்த வுதவி கட்டில்
வீறுபெற்று மறந்த மன்னன் போல
நன்றிமறந் தமையா யாயின் மென்சீர்க்
கலிமயிற் கலாவத் தன்னவிவள்
ஒலிமென் கூந்த லுரியவா நினக்கே

1. இப்பாடலின் துறையினை விளக்குக.
2. இப்பாடலிற் காணப்படும் அணிச்சிறப்பை எடுத்துக்காட்டுக.
3. இப்பாடலினூடாக வெளிப்படும் சங்ககால அகத்திணை மரபின் சிறப்பம்சங்கள் எவையெனக் குறிப்பிடுக.

விளையா டாயமொடு வெண்மண லழுத்தி
மறந்தனந் துறந்த காழ்முகை யகைய
நெய் பெய் நீம்பால்பெய்தினிது வளர்ப்ப
நும்மினுஞ் சிறந்தது நுவ்வை யாகுமென்
றன்னை கூறினாள் புன்னையது சிறப்பே
யும்ம நாணுது நும்மொடு நகையே
விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலும் இலங்கு நீர்த்
துறைகெழு கொண்க நீ நல்கி
னிறைபடு நிழல் பிறவுமா றுளவே

1. இச்செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.
2. இச் செய்யுளில் வெளிப்படும் தோழியின் மதிநுட்பத்தை விளக்குக.
3. இததலைவன் எந்த நிலத்திற்குரியவன்? அந்நிலத்தின் சிறப்புக்களை எடுத்துக்காட்டுக.
4. இப்பாடலினூடாக வெளிப்படும் சங்ககால அகத்திணை இலக்கிய பண்புகளை விளக்குக.

02. அ. எட்டுத்தொகை நூல்களை பொருள் அடிப்படையில் வகைப்படுத்துக.
ஆ. அகத்திணை இலக்கியக் கூறுகளான முதல், கரு, உரி ஆகியவற்றை விளக்குக.
இ. ஆற்றுப்படை இலக்கிய அமைப்பினை விளக்கி, திருமுருகாற்றுப்படையின் சிறப்பியல்புகளை எடுத்துக்காட்டுக.